OFFICE OF THE REGISTRAR
4 - JUN 1938
MADRAS

வந்தேமாதரம்!

சேலம் ஜில்லா கள்ளரக்கணி

—: மரண சிந்து :—

இஃது

இராசீபுரம் தாலூகா முத்துக்காளிப்பட்டி

M. A. சுப்பிரமணிய நாயனர்

அவர்களால் எழுதப்பட்டு

இராசீபுரம் ஸ்ரீ தனலக்ஷிமி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1937

விலை.] [பைசா 3.

வந்தேமாதரம்!

சேலம் ஜில்லா

கள்ளரக்கன் மரண சிந்து.

முதற்பாகம்.

விநாயகர் வெண்பா.

அய்ந்துகரத்தோனே அனுதினமும் நான் துதிக்க
அல்லல் தொல்லை யாவற்றும் அகற்றிடுவா—சேலம் கள்
அரக்கர்தனை வீழ்த்தி அரம்பொருளை ஆசரிப்பாய்
அவனிதனில் யாவற்றும் வாழ்க.

மூன்றடி கோலாட்ட மெட்டு.

நல்ல விநாயக பிள்ளையாரே யுனை நம்பினேனையா
எனைக்காரும் வுனைத்தானே துதித்தேனே
அரகரா கர்த்தனே உன்பாதமலர் நத்தினேனையா (நல்ல)

மங்களமாகவே வந்திடும் காந்திக்கு வந்தனம் செய்வோமே
புவிமீதில் அபிமானம் நிலைநாட்டி
சித்தமுடனே பணிந்து தொழுதேன் செல்வ சீமானே (ந)

கள்ளுக்கடை வைத்து சொல்லமுடியாத கோடி பொருள் போச்சே
புவியோர்க்குக் கடனாச்சே பிடிவாதம்
வக்கீலின் வாதியா கோரட்டு நீதியோ வந்திடும் ஏலம்
[பொருள் (ந)

கள்ளுமயக்கத்தால் நல்ல நினைவுகள் மிக்கத் திண்டாட்டமதாய்
மதிக்கேடாய் இழிவாச்சே புவியோர்க்கு
ஈசனே என்கெதி தானென்று நம்மவர் ஏங்கித்தவிப்பாரே (ந)

4-JUN 1938
MADRAS

கங்காதரத்திலகமே என்ற மெட்டு

காந்தி சன்யாசியாலே கள்ளரக்கன் மாண்டுவிட்டான்
கஞ்சிக்கு பஞ்சமில்லையே நம் சேலம் நாட்டில்
கவலையற்று வாழ்ந்திருப்போமே
பொய் சூலை திருட்டுகள் புகழ்ந்திடும் கொர்வங்கள்
மடிந்திடும் காலமும் வந்ததே புவியில் (கா)

தொகையரா.

ஆதிகலி ஐயாயிரத்து முப்பத்தொன்பதாமாண்டு
புரட்டாசி மூவைந்து தேதி புகர் வாரமதில்,
சேலத்தின் கள்ளரக்கா நீ மாண்டாய் மறு ஜெனனம்
எடுத்திடாதே பிடி சாபம் இன்று முதல்

எடுப்பு.

எமலோகம் சேர்ந்திடுவாயே நீ செய்தக் கொர்வம்
எல்லாமழிந்து போச்சுதே
இனி சிறுமையும் வறுமையும் செவியினில் கேளோம்
சிந்தையில் வஞ்சனை கொஞ்சமுமில்லை. (காந்)

தொகையரா.

தென்னாட்டு காந்திமகான் சி. ஆர். தலைவர் தானேற்று
யாவற்றும் தெரிந்த சீமான், சென்னை மாகாண கவர்னர்
முன்னின்று சேலம் லாகிரியை ஒழித்துவிட
வேண்டுமென மதுவிலக்கு சட்டமொன்று வகித்தமாலே

எடுப்பு.

உம்மால் கள்ளுக்கடை பூத மாண்டுதே—இது
மாண்டதோர் தினத்தில் மகத்தான மழையும் பெய்ந்ததே
வந்திடும் காந்தியை மகிழ்வுடன் வாழ்த்தி
மங்களமாகவே இங்கினி வாழ்வோம். (காந்)

தம்பிரான் உன் மகன் குகன்—என்ற மெட்டு.

பல்லவி.

கள்ளரக்கா வுமக்கிது மரணம் கம் காந்தி வகித்தார்
கள்ளரக்கா வுமக்கிது மரணம் (கள்)

அனுபல்லவி.

சீரகவே யுதித்த சிறப்பான காந்தி மகான்
அமரர்கள் தன் அருளினலே
அரக்கர் படையை மடிக்க துணிந்தாய் (கள்)

சரணம்.

அன்பான காந்திமகான் அலங்கோல மிகவும் பட்டீர்
அலைந்து திரிந்து அரக்கர் மடிய
சிரம சிரம மிகவு மெடுத்தீர் (கள்)

கள்ளுக்குடி மயக்கத்தாலே கண்கள் ரெண்டும் மூடிக்கொண்டு
கனைத்து திரிந்த அரக்கர் மடிய
சிரம சிரம மிகவு மெடுத்தீர் (கள்)

கள்ளு சாராயமுடன் கனமான அபினி கஞ்சா
அதுவும் இத்துடன் அகன்று மடிய
சிரம சிரம மிகவு மெடுத்தீர் (கள்)

மதுவிலக்கு சட்டமதை மாமுனிவர் வகித்திருக்க
மறைந்து திரிய மனது வருமோ
சிரம சிரம மிகவு மெடுத்தார். (கள்)

தனத்தநந்தன தனத்தநந்தன தனனனே தன

தனத்தநந்தன தனத்தநந்தன தனனனே.

மானிலந்தனிலே மம்மதை மதுவா மகிழ்வாக வந்தீர்
மம்மதை யொடுங்கி மாண்டினி மடிவா மதுவீரா

மகிழ்வுடனிருந்த மக்களையெல்லாம் மதிகேடா செய்த
மதங்கொண்ட கள்ளே மாண்டினி மடிவா மக்கள் பசிதீர

மாமதின் மரபிர் மாங்காரமாயுதித்த மதுதீரா நீயும்
மவுனமாயுதித்த காந்தியின் அருளால் மடிந்தாயே

மாங்காரமாக ஓங்காரமிட்டு ஓடி வொளிந்தாலும் வுனை
மகா பாங்காக கண்டு தீங்காகவுன்னை பிடிப்பாரே

மதுவே உமக்கென வகித்ததோர் சட்ட மரியாயோ யுனை
அரசாங்கமதனில் பகிழ்வுடன் சிறையில் வைத்தாரே

மங்களமாக கண்டுனைபிடித்து மாசாங்கம் சேர்த்தால்
மனமிக மகிழ இருவித தண்டனை விதிப்பாரே

மாம்பலமதிலே மகிழ்வுடனிருக்கும் மகாராஜா வுனை
மாணமு மடைய மந்திரி தீர்ப்பை வகித்தாரே (த)

பெண்கள் குதூகலக் கும்மி.

தென்பாங் குன்றினி—என்ற மெட்டு.

மங்கையர் வந்திங்கு கூடியே நாமெல்லாம்
மகத்தான காந்தியை—வாழ்த்திடுவோம்

இவரிக்கிணை எவருற்றவர் புவனத்தினில் ஜெகதீசா
இக்காலத்தில் இவரொரு பிறவியாமே (மங்)

கள்ளுக்கடை இங்கு வந்தக் காலமெல்லாம்
கணவனின் கஷ்டம் பொறுக்கவில்லை

கண்ணீர்விழ பெண்மாதரை மண்மீதினில் வன்பாகவே
வாயினில் வந்ததை பேசிடுவார் (மங்)

கணமான பொருளெல்லாம் அடமானம் வைத்துமே
காற்றினில் தூற்றியே போச்சுதம்மா

கஞ்சிக்கிலை மிஞ்சிற்றுர கந்தத்துணி பஞ்சம் வா
கவலையின் கஷ்டத்தை தீர்த்துவிட்டோம் (மங்)

மஹாமுனி காந்தியின் அருளாலே இப்போ
மக்களும் நாமும் சுகமாக

மணவாளனும் மணவாழ்க்கையை புவிமீதினில் குடிக்ஷேமமா
மகிழவே செய்தோரை வாழ்த்துவோமே. (மங்)

எட்டியாபுரத்து ராஜன்—என்ற மெட்டு

எங்கும் புகழ் பெற்றவர்தான் தென்னாட்டு காந்தி
இவருக்கிணை ஒருவருண்டோ சேலம் ஜில்லாவில்
இன்பமுடனே நாமும் எடுத்துரைப்போம் புவியில் (எ)

மதுவீரா நீ வுலகில் மகத்தான பாபம் செய்தாய்
மாமுனிவர் காந்தியாலே மாளுங்காலமாச்சே
இன்னாட்டில் நீயும் எடுத்திடாதே ஜெனனம் (எ)

கள்ளரக்க வுன்னை நம்பி கார்த்தவர்களத்தனையும்
கஞ்சிக்கும் வழியில்லாமல் தலைமேற் கையை வைத்துவிட்டாய்
இன்னாட்டில் நீயும் இருந்திடாதே போ போ (எங்)

பெண்டு பிள்ளையத்தனையும் பேய்போல தவிக்க செய்தாய்
மாமுனிவர் காந்தியாலே மரண தண்டனை விதிக்கலாச்சே
சீரழிந்தக் கள்ளே திரும்பிடாதே போ போ (எ)

பலநாட்டு ஜில்லாவிலும் பாவியான ஏழை ஜில்லா
பார்த்துவந்த சியாராளே பரிகாரமுண்டாச்சுதம்மா
அன்பான காந்தி இவர் யாருக்குமுபகாரி (எ)

சேலம் ஜில்லாவினுள்ள சிறுமைகளை தீர்க்கவேதான்
சிறப்பான காந்தியிவர் சீர்திருத்த வந்தமகான்
சேவடியை நாமும் சித்தமுடனே வாழ்த்து (எ)

எம். எ. எஸ். நாயனும் இன்பமுடன் பாடிவைத்தேன்
கனமான பிழையிருந்தால் காத்தருளும் சிறப்புடனே
காந்திமகான் நன்றிக் கனவிலுமே மறவேன் (எங்)

வந்தேமாதரம்!

ஸ்ரீ சுப்பிரமணிய நாயனுர் மிகவும் சிறந்த ஹரிஜனத் தலைவரும் மதுவிலக்குத் தொண்டருமாவார். சேலம் ஜில்லாவில் பூரண மதுவிலக்கு சட்டம் அமுலுக்கு வந்தபொழுது "கள்ள ரக்கன் மரண சிந்து" என்று பற்பல எளிய மெட்டுகளில் தெளிவான பாஷையில் தன்னாலியன்ற அளவு பாடியிருக்கின்றார். இக்காலத்தில் இது மிகவும் உபயோகமான தென்று நண்பர்கள் நன்கு அறிவார்கள். ஆதலால் ஸ்ரீ நாயனுரின் முயற்சி வெற்றிபெறுமாறு இறைவியை வேண்டுகின்றேன்.

இராசீபுரம் தாலூகா
காங்கிரஸ் கமிட்டி ஆபீஸ்
26—10—37

V. தக்ஷிணமூர்த்தி
காரியதரிசி.

"தமிழர்சேவை"

"தமிழர்சேவை" தேசீய ஹரிஜன முன்னேற்ற மாதப் பத்திரிகை. ஹரிஜனங்களுக்காகவும் சிறப்பாய் தேசீயத்திற்காகவும் ஊழியம் புரியவும் எல்லா ஹரிஜனங்களும், ஹரிஜன முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள காங்கிரஸ், சீர்திருத்தமுள்ள அபிமானிகளும் ஆதரிக்க வேண்டப்படுகிறது. வருட சந்தா ரூபாய் ஒன்று.

மானேஜர், "தமிழர் சேவை"
இராசீபுரம், (சேலம் ஜில்லா.)

குறைந்த விலை! முந்துங்கள்!!

சேலம் ஜில்லா கள்ளரக்கன் மரண சிந்து.

புஸ்தகம்	1-க்கு	விலை	0	0	3
,,	100-க்கு	,,	1	4	0

பலவித வர்ண மெட்டுகளுடன் இரண்டாம் பாகம் வெளிவரும்.